## நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு

## CC No.113/2023

எ.த.சா.– 1 திரு. சுந்தர் த/பெ.வெங்கடேஷ் நாள்–29.08.2025

**குறுக்கு விசாரணை–**

என்னிடம் காட்டப்படும் அதசாஆ 1 காசோலை மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் மேன் பவர் கான்ட்ராக்டர். நான் எங்கு வசிக்கிறேன் என்று கேட்டால் எனது சொந்த ஊர் செங்கல்பட்டு வரதராஜன் தெரு, வேதாசலம் நகரில் வசிக்கிறேன். எனது குடும்பம் அந்த முகவரியில் வசித்து வருகிறார்களா என்று கேட்டால் நானும், எனது அம்மா மட்டும் இருக்கிறோம். அந்த வீட்டில் எனது மாமா தேவதாஸ் வசிக்கிறாரா என்று கேட்டால் வசிக்கிறார். அவர் எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். எனது சொந்த வீடு மதுராந்தகத்தில் இருந்தது என்றாலும், அதை விற்பனை செய்துவிட்டு எனது அக்காவின் கணவரான தேவதாஸ் என்பவரின் வீட்டில் நானும், எனது அம்மாவும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான் தனி போஷனில் வசிக்கிறோம்.

அதசாஆ 1 காசோலையின் பின்பக்கம் எனது மாமா தேவதாஸ் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள Stop payment கடிதம் எதசாஆ 3 ஆனது இவ்வழக்கு காசோலைக்கு சம்மந்தப்பட்டது இல்லையென்று சொன்னால் சரிதான். நான் அந்த சமயத்தில் வேறு இடத்தில் வசித்தேன் என்பதற்காக அந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன். எதசாஆ 1 இன்சூரன்ஸ் ஆவணம், எதசாஆ 4 வருமான வரி ஆவணம், எதசாஆ 2 ஜிஎஸ்டி பார்ம் ஆகியவைகள் அனைத்தும் நான் உத்திரபிரதேஷ், கன்னோஜில் நிரந்தரமாக வசித்ததற்கான ஆவணங்கள் கிடையாது அங்கு வசித்து வந்ததற்கான ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான்.

மனுதாரர் எனக்கு என்ன உறவுமுறை வேண்டுமென்றால் எனது அத்தையின் மருமகள். மனுதாரரின் கணவரான கோபிராஜ் எனது தாய்மாமன் என்று சொன்னால் சரியல்ல, எனது அத்தை மகன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 மாதங்களுக்கு ஒருமுறை தான் எனது தாயாரை பார்ப்பதற்காக வருவேன் என்றும், அவரது அவசர செலவிற்காக பணம் தேவைப்படும் போது வங்கியில் பணம் எடுப்பதற்கு ஏதுவாக ஐசிஐசிஐ செங்கல்பட்டு வங்கியின் காசோலைகளை கையொப்பம் செய்து வைத்துவிட்டு செல்வது வழக்கம் என்று கூறியிருப்பது முற்றிலும் பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா எனது அக்கா மற்றும் அவரது கணவருடன்

தான் வசித்து வந்தாரென்றாலும், அவர் தனியாக வசிக்கவில்லையென்றாலும், அதனால் அவருக்கு காசோலைகள் கையொப்பமிட்டு வைத்துவிட்டு செல்ல வேண்டிய அவசியமில்லையென்று சொன்னால் சரியல்ல, எனது அம்மா தனி போஷனில் இருந்தார் அவரது செலவிற்கு நான் தான் பணம் கொடுப்பேன்.

நான் பிரமாண வாக்குமூலத்தில் காசோலைகளை கையொப்பம் செய்து வைத்துவிட்டு சென்றதாக இவ்வழக்கிலிருந்து தப்பிக்கும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கையொப்பம் செய்து வைத்துவிட்டு செல்லும் காசோலைகளில் தேவதாஸ் பின்பக்கம் கையொப்பம் செய்வாரா என்று கேட்டால் தேவதாஸ் காசோலையை பணம் எடுப்பதற்காக சென்றால் அவர் கையொப்பம் செய்வார். வேறு யாராவது பணம் எடுப்பதற்காக சென்றால் அவர்கள் கையொப்பம் செய்வார்கள். வழக்கு காசோலையில் தேவதாஸ் பின்பக்கம் கையொப்பம் இட்டுள்ளார் அப்படியானால் அந்த காசோலையை அவர் எடுத்து சென்றதாக அர்த்தம் என்று சொன்னால் சரியல்ல. தேவதாஸ் மற்றும் எனக்கும் பல்வேறு கடன் பிரச்சனை இருப்பதால் மனுதாரரிடமும், அவரது கணவரிடமும், 2015 ம் ஆண்டிலிருந்து பல்வேறு தொகைகளை நான் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் யாரிடமும் கடன் வாங்கியது கிடையாது. தேவதாஸிற்கும், எனக்கும் பணம் பெற்று கொண்டு வழக்கு காசோலையை மனுதாரரிடம் நான் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு நான் தான் பணம் கொடுத்துள்ளேன்.

நான் கோபிராஜ் காசோலைகளை எடுத்து சென்றது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனாள ன்றால் இல்லை, வங்கியில் Stop payment கடிதம் கொடுத்தேன், அவர் தான் எடுத்து சென்றார் என்று எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் கோபிராஜ் எடுத்து சென்றதாக தெரிய வந்தது என்று குறிப்பிடடள்ளேன் என்று கேட்டால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு கோபிராஜ் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்று கேட்டால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட காசோலை Stop payment கொடுத்தது சம்மந்தமான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. எந்த காலததிலும் காசோலை தொலைந்து போகவில்லை, நான் Stop payment கொடுக்கவில்லையென்றாலும், மனுதாரரிடம் பெற்ற பணத்திற்காக கொடுக்கப்பட்ட இவ்வழக்கு காசோலை என்று சொன்னால் சரியல்ல. நான்மனுதாரரிடம் பெற்ற தொகையினை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்ததால் இரு

தரப்பினருக்கும் இடையே உறவினர்கள் மற்றும் ஊர்பெரியவர்கள் முன்னிலையில் நடந்த பஞ்சாயத்தில் வழக்குகாசோலையை வங்கியில் செலுத்தி பணமாக்கி கொள்ளுமாறு நான் கொடுத்தேன்ள ன்று சொன்னால் சரியல்ல, அவ்வாறு எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.